# <u>4வது சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை- 600 104.</u>

நாள். 07.08.2025

எம்.சி.ஓ.பி எண். 4404/2022

ம.சா. 1

பெயர். ஸ்ரீராம்

த/பெ.திரு. சந்திரசேகரன்

வயது.24

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் ஏற்கனவே தாக்கல் செய்கிறேன். ம.சா.ஆ 1 முதல 19 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. ம.சா.ஆ. 6 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>2வது எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் அம்மாவின் தொழில் மற்றும் வருமானம் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர்கள் வீட்டில் இருந்து பிசியோதரபி வேலை செய்து வந்தார். காவல்நியைலத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. 26.03.2023 அன்று தயார் காலமனார். திருத்தப்பட்ட மனுவில் இறப்பு தேதியை குறிப்பிடவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. சத்தியபிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கால் பாதத்தில் ஏற்பட்ட காயத்தினால் செப்டிக் ஆனதால் இறந்தவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மசாஆ 1 முதல் தகவல் அறிக்கை காலில் காயம் ஏற்பட்டது என்று குறிப்பு இல்லை என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டவுடன் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் முதல் சிசிக்சை பெற்று மறுநாள் SRM மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மசாஆ 2 முதல் மசாஆ 5 ஆவணங்களில் காலில் அடிப்பட்டதாக எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரிதான். அவருக்கு உள்காயம் ஏற்பட்டது. என் அம்மாவிற்கு 10 வருடங்களாக சக்கர நோய் உள்ளது என்றால் சரிதான். விபத்துக்கு முன்பு வரை திடமாக தான் இருந்தார். குற்றவியல் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு என்ன நிலையில் உள்ளது குறித்து எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் என்னுடைய தந்தை என்றால் சரிதான். ஒரே விலாசத்தில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் வரிசை எண் 7 நிரப்பபடாமல் இருக்கிறது என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கையில் கார் டயர் வெடித்து வண்டி கட்டுபாடு இழந்ததாக சொல்லியுள்ளேன் மாறாக தற்போது பள்ளத்தில் விட்டு கார் டயர் வெடித்தது என்று சொல்லியுள்ளேன் என்றும் எது சரியான சம்பவம் என்றால் பள்ளத்தில் விட்டு கார் டயர் வெடித்தது என்பது தான் சரியான சம்பவம். புகாரில் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் தந்தையின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது விவரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். போலிசாரால் தாயாரிக்கப்பட்ட மாதிரி வரைப்படம். மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் குற்ற பதத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுவில் காலில் அடிப்பட்டதாக குறிப்பு இல்லை என்று சொன்னால் சரிதான். மசாஆ 6 குறிப்பிட்டுள்ள மருத்தவமனையில் என் தயார் ஏற்கனவே பணியற்றியுள்ளார் என்றால் சரிதான். மசாஆ 6லில் மருத்துவருடைய கையெழுத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த

வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. தேவைப்பட்டால் நான் மருத்துவரை விசாரிக்கிறோம். இறப்பதற்கு முதல் நாள் இரவு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன் மீண்டும் மறுநாள் காலை 11 மணியளவில் சிகிச்சைக்காக அழைத்து சென்றேன் மீண்டும் பிற்பகல் சுமார் 2 மணியளவில் இறந்துவிட்டார் என்று மருத்துவர் குறிப்பிட்டார். மேற்படி மருத்துவமனையில் இறப்பு சான்றிதழ் வழங்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. பி.எம். ரிப்போர்ட் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்து 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றும் இயந்திர கோளாரால் இந்த வபித்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் என் தயார் இறக்கவில்லை என்றும் ஏற்கனவே அவருக்கு சக்கர நோய் இருந்த காரணத்தினால் செப்டிக் ஏற்பட்டு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கும் இறப்பிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

ARUNDHADHI MAGESH

Digitally signed by ARUNDHADHI MAGESH